# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

<u>ஆணை நாள் - **17.06.2025**</u>

**<u>முன்னிலை</u>**

**திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

## <u>வழக்கு எண். CP 1388/SCIC/2023</u>

திரு.S. ராஜேஷ் த/பெ.எஸ்.ஶ்ரீராமலு
எண்.3/291, நக்கீரன் தெரு ... புகார்தாரர்
மொகப்பேர் கிழக்கு
சென்னை - 600 037.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர் ....... பொதுஅதிகார அமைப்பு
வட்டாட்சியர் அலுவலகம்
பல்லாவரம் வட்டம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

**<u>ஆணை</u>**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 23.01.2023 |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 13.03.2023 |
| 3. | மனுதாரரின் புகார் மனு | 13.04.2023 |
| 4. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 03.02.2025 |
| 5. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 09.04.2025 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / பல்லாவரம் வட்டாட்சியர், பல்லாவரம், சென்னை-43 அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “கீழ்க்கட்டளை கிராமம், செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் வட்டம் புல எண்.304/7, 8, 9 மற்றும் 304/11 மற்றம் அதன் உட்பிரிவுக்குரிய கீழ்க்கண்ட ஆவணங்களின் நகல்கள் தர வேண்டும். (1) FMB வரைபடம் நகல் (2) நகர வரைபடம்” எனக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (17/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு.சசிக்குமார், தலைமையிடத்து துணை வட்டாட்சியர் (பொறுப்பு) பல்லாவரம் வட்டம் அவர்கள் ஆஜரானார். ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரரின் 23/01/2023 தேதியிட்ட பிரிவு 6(1)-ன் கீழான மனுவின் வாயிலாக மனுதாரர் FMB நகல் மற்றும் நகர வரைபடம் வழங்குமாறு கோரியுள்ளார். ஆனால், அப்போதைய (23/01/2023) பொதுத் தகவல் அலுவலர் திருமதி.பூங்குழலி, (தற்போது) வருவாய் மேலாண்மை ஆணையரகம், சென்னை-5 அவர்கள் எவ்வித தகவலும் வழங்கவில்லை எனத் தெரிய வருகிறது, எனவே திருமதி.பூங்குழலி, (தற்போது), வருவாய் மேலாண்மை ஆணையரகம், சென்னை-5 மீது பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கங்களை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள், தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மூலமாக ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. தற்போதைய பொதுத் தகவல் அலுவலர், மேற்சொன்ன முன்னாள் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து காரண விளக்கங்களை பெற்று, அதனை 31/07/2025 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று பணிக்கப்படுகிறார்.**

**3. இன்றைய விசாரணையின் போது, பொதுத் தகவல் அலுவலர் 03/02/2025 தேதியிட்டு அனுப்பிய கடிதத்தில், 31/10/2023 தேதியிட்டு வரைபடம் உள்ளிட்ட தகவல்களை அனுப்பிவிட்டதாகக் குறிப்பிட்டு அனுப்பிய கடிதம் தமது அலுவலகத்திற்கு திருப்பப்பட்டுவிட்டதாகவும், எனவே, மீண்டும் அக்கடிதத்தை அனுப்பியதாகவும் தெரிவித்தார். மனுதாரர், தான் அந்த வரைபடத்தைப் பெற்றுக் கொண்டதாகவும், ஆனால் அவ்வரைபடம் தெளிவானதாக இல்லை எனத் தெரிவித்து, அதனை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மனுதாரரின் கோரிக்கையினை ஆணையம் பதிவு செய்து ஏற்கிறது. இன்றைய விசாரணையின் போது மனுதாரர் இரண்டு, Town Survey Land Register-ன் Certificate of Extract -களை சமர்ப்பித்தார், அதில் ஒன்று 13/01/2020 தேதியிட்டு வட்டாட்சியர், செங்கல்பட்டு வட்டாட்சியர் அலுவலகத்தால் வழங்கப்பட்டுள்ளது, அதில், புல எண்.304/8-ல் அடங்கல் என்ற தலைப்பில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் எனக் குறிப்பிட்டுள்ளதாகவும் மற்றொரு Certificate-ல் 26/05/2022 தேதியிட்டு வருவாய் கோட்ட அலுவலரால் அங்கீகரிக்கப்பட்டு அதே புல எண்.304/8-க்கு அடங்கல் என்ற தலைப்பில் ஏரி உள்வாய், அடங்கல் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் எனவே ஒரே புல எண்ணுக்கு இரு வேறு அடங்கல் என முரணாக உள்ளது என்றும் தெரிவித்தார்.**

**4. எனவே, மேற்சொன்ன முரண்பாட்டின் மீது இவ்வாணை கிடைக்கப் பெற்ற ஒரு மாத காலத்திற்குள் பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், பல்லாவரம் வட்டாட்சியர் அலுவலகம் அவர்கள் விசாரணை நடத்தி அவ்விசாரணை அறிக்கையினை மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, அதில் தவறு உள்ளது கண்டறியப்பட்டால், அந்த முரண்பாட்டிற்கு தீர்வு காண வேண்டியிருப்பின் அதனை சரி செய்வதற்கு, அவ்வறிக்கையினை வருவாய் கோட்ட அலுவலருக்கு உரிய நடவடிக்கைக்காக அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரிடமிருந்து பெறக் கூடிய அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகல், விசாரணை அறிக்கையின் நகல் மற்றும் முன்னாள் பொதுத் தகவல் அலவலரிடமிருந்து பெற்ற காரண விளக்கம் ஆகியவற்றினை 31/07/2025 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 1388/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
பல்லாவரம் வட்டம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

2.திருமதி பூங்குழலி
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்
(தற்போது) கண்காணிப்பாளர்,
வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை ஆணையரகம்
சென்னை

**புகார்தாரர்**
திரு.S. ராஜேஷ் த/பெ.எஸ்.ஸ்ரீராமலு
எண்.3/291, நக்கீரன் தெரு
மொகப்பேர் கிழக்கு
சென்னை - 600 037.

நகல்.
1. வருவாய் நிர்வாக ஆணையர்
வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை ஆணையரகம்
எழிலகம், சென்னை - 600 005.

2. பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-35 (for follow up)

RG/PC